# தமிழர் தகவல்

# TAMILS' INFORMATION

1991

மார்ச்
March


1990ம் ஆண்டின் பன்னிரண்டு மாதங்களிலும் கனடாவில் அகதிநிலை கோரி மனு தாக்கல் செய்த இலங்கையரில் 3645 பேரின் மனுக்கள் முதற்கட்ட விசாரணையை முடித்தன. பூரண விசாரணையை 2694 மனுக்கள் முடித்தன. முதற்கட்ட விசாரணையை முடித்த 3645 மனுக்களில் 3636 ஏற்கப்பட்டன. ஆறு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. பூரண விசாரணையை முடித்த 2694 மனுக்களில் 2302 ஏற்றுக் கொள்ளப்பட்டன. 270 பேரின் மனுக்கள் பூரண விசாரணையின் பின்னர் நிராகரிக்கப்பட்டுள்ளன. 1989ம் ஆண்டிலும் 1990ம் ஆண்டிலும் கனடாவுக்கு வந்து C-55 குடிவரவுச் சட்ட விதிகளின் கீழ் அகதிநிலை கோரியவர்களே இவர்கள் அனைவருமாவார். பூரண விசாரணையின் பின்னர் நிராகரிக்கப்பட்டவர்களை நாடுகடத்தும் உரிமை கனடிய அரசுக்கு இருக்கிறது.

Backlog எனப்படும் தேக்கநிலையில் உண்மையாக எத்தனை அகதிகள் இருக்கின்றனர் என்ற சரியான விபரம் ஒட்டாவா குடிவரவு தலைமை அலுவலகத்தில் இல்லை. 85,000 மனுக்கள் தேக்கநிலையிலிருப்பதாக அதிகாரிகள் கூறுகின்றனர். இதில் சுமார் ஒரு லட்சத்து இரண்டாயிரம் பேர் இருக்கலாமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் ஒரு லட்சத்து இருபதாயிரம் பேர்வரை தேக்கநிலை அகதிகளாகவிருப்பதாக மற்றொரு அறிக்கை கூறுகின்றது. 1990 இறுதிவரை தேக்கநிலை மனுக்களில் 34,715 விசாரணைகளை முடித்துள்ளன. இது சுமார் 41,658 பேருடன் சம்பந்தப்பட்டது. மொத்தத்தில் இது 41 வீதமாகும். இதில் 27,512 பேருக்கு நிரந்தர வசிப்பிட உரிமை கிடைத்துள்ளது. தேக்கநிலையில் மேலும் 50,285 மனுக்கள் விசாரணைக்குட்படுத்த வேண்டிய நிலையிலுள்ளன. இவர்களின் எதிர்காலம் பற்றி எதிர்வரும் செப்டெம்பர் மாதத்துக்கு முன்னர் தீர்மானிக்கப்படலாம்.



● மகப்பேற்று நலன் அதிகரிப்பு ● "லீகல் எய்ட்" எங்கே, எப்படிப் பெறுவது? ● தேக்கநிலை அகதிகள் விசாரணை துரிதமடைகின்றது. ● ஜூன் 4ம் திகதி கனடிய குடிசன மதிப்பீடு ● 4000 வரையிலான தமிழர்கள் 3 மாதத்தில் வேலையிழப்பு ● கனடிய அரசின் சட்டங்களைக் கண்டித்து கந்தசாமி வெளியேறினார். ● 270 இலங்கையரின் அகதி நிலை மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. ● இலங்கை அரசின் மனித உரிமை மீறல்கள் பற்றி விபரிப்பு ● லான்ட்ஸ்ரவுண் கூட்டுறவு இல்ல இயக்குனர் சபையில் இருபெண்கள் ● வடகிழக்கு தாக்குதல்களை நிறுத்தக் கோரி ஜோ.கிளாக்கிற்கு கடிதம் ● பிறப்பு, இறப்பு கல்விச் சான்றிதழ்களை மொழி பெயர்க்க இலவச சேவை ● வரியைக் குறைப்பது எப்படி ● ஆங்கில மொழி வகுப்புகள் பிரபல்யம் ● பெற்றூர் மகாநாடு ● இந்து ஆலய உற்சவங்கள் ● தமிழில் ஆராதனை ● தொலைபேசிச் செய்தி சேவை

கனடாவில் ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் மாதம் 4ம் திகதி அகதிகள் உரிமை தினம் (Refugee Rights Day) கொண் டாடப்படுகிறது. அகதிகள் பொறுப்பேற்பு, அகதிகள் புனர்வாழ்வு, அகதிகள் நிவாரணம் ஆகியவைகளுடன் சம்பந்தப்பட்ட அமைப்புகளும், தொண்டர் நிறுவனங்களும் அகதிகள் உரிமை தினக் கொண்டாட்டங்களை பல்வேறு நிகழ்ச்சிகளுடன் நடத்தி வந்துள்ளன. Toronto Refugee Affairs Council எனப்படும் ரொறன்ரோ அகதிகள் விவாகார அமைப்பு இவ் வருட அகதிகள் உரிமை தினத்தை முழுநாள் நிகழ்ச்சியாக கொண்டாட ஏற்பாடு செய்து வருகின்றது. குடிவரவு இலாகா அதிகாரிகளின் உரைகள், கருத்தரங்கு, நாடகம் போன்ற நிகழ்ச்சிகள் இங்கு இடம் பெறும். ஏப்ரல் 6ம் திகதி சனிக்கிழமை இந்த நிகழ்ச்சி நடைபெறும். பங்குபற்ற விரும்புவர்கள் 757-7010 இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம்.


இதழ் 2 ISSUE

இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி • A MONTHLY INFORMATION DIGEST



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தமிழர் தகவல்**

P.O. Box - 3, Station 'F'
Toronto, Ontario
M4Y 2L4

Phone: (416) 920-9250

**தயாரிப்பு**
ஈழத்தமிழர் தகவல் நிலையம்
ரொறன்ரோ
&
கத்தோலிக்க
குடிவரவு நிலையம்
ஸ்காபுரோ
தொலைபேசி (416) 757-7010

**வெளியீடு**
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

**வடிவமைப்பு**
அகிலன் அசோஷியேட்ஸ்

**ஆசிரியர்**
எஸ்.திருச்செல்வம்

**உதவி ஆசிரியர்**
றஞ்சி

**விநியோக முகாமையாளர்**
எஸ். ரி. சிங்கம்
(416)921-7076

**படங்கள்**
சுபாகன், ராஜா

**அச்சமைப்பு**
றிப்ளக்ஸ் பிரிண்டிங்
(416) 975-0196


## ஆசிரியரிடமிருந்து....................FROM THE EDITOR

இங்கு வாழும் தமிழர்களின் நீண்ட காலத் தேவையொன்றை 'தமிழர் தகவல்' ஓரளவுக்குப் பூர்த்தி செய்துள்ளதென்பதை அறிந்தபோது, நாம் மிகவும் மனமகிழ்வடைய முடிந்தது. கடிதங்கள் மூலமாக, தொலைபேசி ஊடாக, நேரில் சந்தித்த வேளைகளில் இவ்வெளியீட்டு முயற்சிக்கு தங்கள் மனப்பூர்வமான ஆதரவைத் தெரிவித்தவர்கள் பலர்.

பத்திரிகையையோ, சஞ்சிகையையோ புதிதாக ஆரம்பிப்பவர்கள் தங்களின் இரண்டாவது இதழில், 'பாராட்டியும் வாழ்த்தியும் பல நூற்றுக்கணக்கான கடிதங்கள் வந்து குவிந்துள்ளன' என்று எழுதுவதே மரபாகிவிட்ட காலமிது. எனவே, அவ்வாறு குறிப்பிடுவதை நாம் விரும்பவில்லையாயினும், உண்மையைக் குறிப்பிட வேண்டியது தவிர்க்க முடியாததாகியுள்ளது. அன்புடன் ஆதரவு தெரிவித்தவர்களுக்கும், பண்புடன் பாராட்டிக் கடிதம் அனுப்பியவர்களுக்கும் நன்றிகள்.

சரியான பொதுத் தகவல்களை அதிகாரபூர்வமானவர்களிடமிருந்து பெற்று, அவற்றைச் சாதாரண மக்களும் புரிந்துணர்ந்து கொள்ளுமாறு தொகுத்து வெளியிடுவதென்பது எப்போதும் இலகுவானதாக அமைந்துவிடாது. இதனை கூட்டு முயற்சியின் மூலமே தொடர்ச்சியாகவும், ஒழுங்காகவும் செய்யமுடியும்.

இந்தவகையில், சம்பந்தப்பட்ட துறைகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட சிலரை, அவர்கள் சார்ந்த விடயங்கள் பற்றி இந்த இதழில் எழுதவைத்துள்ளோம்.

கனடாவில் பாரிஸ்டராகவும், சொலிஸிட்டராகவும் பட்டம் பெற்றுப் பணிபுரிபவர் ஜெகன் என்.மோகன். குடிவரவு, அகதிகள் விசாரணைகளில் மட்டுமன்றி, கனடாவின் பல்வேறு சட்ட விடயங்களிலும் நிரம்பிய அனுபவமுள்ளவர். சட்டத்துறையில் புகழ் பெற்றவர்.

நாதன் ஸ்ரீதரன் இலங்கையின் சட்டத்தரணி. ISAP செயற்திட்டமொன்றில் சிறிது காலம் பணியாற்றியவர். வேலையற்றோர் காப்புறுதி சம்பந்தமான பயிற்சிப் பணியில் இப்போது ஈடுபட்டுள்ளார்.

திரு. கிருஷ்ணலிங்கம் பத்திரிகைத் துறையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர். யாழ்ப்பாணப் பத்திரிகைகளில் பல மொழிபெயர்ப்புக் கட்டுரைகளை எழுதியவர். சிறந்த மொழி பெயர்ப்பாளரும், கட்டுரையாளருமாவார்.

தங்களது துறைசார்ந்த விடயங்களை இவ்விதழில் இடம்பெற இவர்கள் உதவியுள்ளனர். இவ்வரிசையில் தொடர்ச்சியாக பலர் எழுத ஏற்பாடாகியுள்ளது.

கனடாவில் வாழும் தமிழர்களுடன் சம்பந்தப்பட்ட சில நிறுவனங்கள் நடத்திய விழாக்கள், போட்டிகள், வைபவங்கள் சம்பந்தப்பட்ட புகைப்படங்களும் செய்திகளும் இதழில் இடம்பெற்றுள்ளன. இங்கு செயற்படும் கலை, கலாசார, சமய, சமூக, இலக்கிய, விளையாட்டு அமைப்புகள் தங்கள் சேவைகளுடன் சம்பந்தப்பட்ட நிகழ்வுகள், தகவல்களை உரிய காலத்தில் எமக்கு அனுப்பிவைத்தால் அவை தகுதியாயின் பிரசுரத்திற்குச் சேர்த்துக் கொள்ளப்படும்.

குடிவரவுத் துறையுடன் சம்பந்தப்பட்டதான 'வாசகர் சேவை' ஒன்றினை ஆரம்பிப்பது பற்றி ஆலோசித்து வருகின்றோம். காலக்கிரமத்தில் இதுபற்றி அறியத்தருவோம்.

காலத்தின் தேவையுடன் இணைந்த சேவையாகக் கருதி, இப்பணியில் பாதம் பதித்துத் தொடருகின்றோம்.

எஸ்.திருச்செல்வம்


**TAMILS' INFORMATION**

P.O. Box - 3, Station 'F'
Toronto, Ontario
M4Y 2L4

Phone: (416) 920-9250

**Produced by**
EELAM THAMIL INFORMATION CENTRE OF TORONTO (ETHIC)
&
CATHOLIC IMMIGRATION BUREAU SCARBOROUGH REGION
Phone: (416) 757-7010

**Published by**
THAMIL INFORMATION & RESEARCH UNIT (THIRU)

**Design**
AHILAN ASSOCIATES

**Editor**
THIRU S. THIRUCHELVAM

**Asst. Editor**
RANJI

**Circulation Manager**
S. T. SINGAM
(416) 921-7076

**Photos**
SUBAGAN & RAJA

**Layout & Printers**
REFLEX PRINTING
(416) 975-0196


# மாலைநேர ஆங்கில மொழி வகுப்புகள் ரொறன்ரோவில் பிரபல்யம்



ஆங்கிலம் தெரியாத தமிழர்களுக்கான ஆங்கில மொழி வகுப்புகள் ரொறன்ரோவின் பல பாடசாலைகளில் தற்போது நடைபெற்று வருகின்றது. மாலை நேர வகுப்புகளாக இவை நடைபெறுவதால் பெற்றோர்கள் மட்டுமன்றி தொழில் புரிபவர்கள், மாணவர்கள் ஆகியோரும் இவ்வகுப்புகளில் மிகுந்த ஆர்வத்துடன் பங்குபற்றி வருகின்றனர். சென் ஜேம்ஸ் ரவுண் ரேஸ் அவினியு பாடசாலையில் ஆங்கில மொழி வகுப்பில் பங்குபற்றுபவர்கள் தங்கள் ஆசிரியையுடன் இருப்பதையும், ஆங்கில மொழி வகுப்புகளின் மேற்பார்வையாளர் மேத்தா ஷெப்பர்ட், பாடசாலை அதிபர் ஜொய்ஸ் புறுஸே ஆகியோர் மாணவர்களுடன் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகப்பேற்று நலன் அதிகரிக்கப்பட்டுள்ளது
# LONGER UNPAID PARENTAL LEAVE

கனடிய மத்திய அரசின் வேலையற்றவர் காப்புறுதிச் சட்ட விதிகளின்படி மகப்பேற்று நலன் பெற்றோருக்கு வழங்கப்பட்டு வருகின்றது. வேலையற்றவர் காப்புறுதிச் சட்டத்தின்படி, மகப்பேற்று நலனாக 15 கிழமைகளும், மேலதிக பெற்றோர் நலனாக 10 கிழமைகளும் தற்போது உதவித் தொகை வழங்கப்படுகிறது. பெற்றோர் நலனை தாய் அல்லது தந்தை பெற உரித்துண்டு. (1990ம் ஆண்டு நவம்பர் மாதம் 18ம் திகதி முதல் இது அமலுக்கு வந்துள்ளது)

கடைசி 52 வாரங்களுக்குள் 20வாரங்கள் (இந்த 20 வாரங்கள் தகுதி காண் வாரங்களாகக் கணிக்கப்படுகின்றது) வேலை செய்த தாயார் மட்டும் மகப்பேற்று நலனுக்கு விண்ணப்பிக்கலாம். இருபது கிழமைகள் பெறப்பட்ட சராசரி வேதனத்தின் (சம்பளத்தின்) அறுபது வீதம் பிரச வத்துக்கு முன்னர் எட்டு வாரங்களிலிருந்தோ, அல்லது பிரசவத்தின் பின்னர் பதினைந்து வாரங்களுக்கோ வழங்கப்படும்.



பதினைந்து வாரங்களின் பின்னர், மேலதிக பெற்றோர் நலனுக்கு விண்ணப்பம் செய்து, தொடர்ந்தும் பத்து வாரங்களுக்கு நலனைப் பெற்றுக் கொள்ளலாம்.

மகப்பேறு நலனுக்கு விண்ணப்பம் செய்வதற்கு, அருகிலுள்ள வேலையற்றவர் காப்புறுதி அலுவலகத்தில் அதற்குரிய படிவத்தினைப் பெற்று, சரியாக நிரப்பி, வைத்திய சான்று, தொழில் தருநரின் (Employer) வேலை விபர சான்று ஆகியவைகளையும் சேர்த்து அனுப்பவேண்டும். வேலையற்றவர் காப்புறுதி இல்லத்தை Manpower Office என்று இங்கு பொதுவாகக் கூறுவர்.

பெற்றோர் நலனை தாய் அல்லது தந்தை மட்டுமே பெறமுடியும். இருவரும் ஒரே நேரத்தில் பெற முடியாது. ஒன்ராறியோ மாநில அரசு, குழந்தைகள் நலனைக் கருத்திற் கொண்டு, மேலதிகமாகப் பத்து வாரங்கள் பெற்றோர் இருவருக்கும் சம்பளமற்ற விடுமுறையினை தொழில் தருநரிடம் (Employer) கேட்டுப் பெற வழிமுறைகள் செய்துள்ளது. குறிப்பிட்ட இந்த மேலதிக பத்து வார காலத்தில் அவர்களை வேலையிலிருந்து நீக்க முடியாது. இதன் காரணமாக அவர்களது முறையான சம்பள உயர்வு, சேவை மூப்பு (Seniority) போன்றவைகளைக் குறைக்கவும் முடியாது.

ஒன்ராறியோ மாகாண/கனடிய மனித உரிமை ஆணைக் குழு (Human Rights Commission) ஒரு பெண்மணி கர்ப்பமுற்றுள்ள காரணத்தால் வேலை வழங்க மறுக்கவோ அல்லது வேலையிலிருந்து நீக்கவோ முடியாது என்று தெளிவாகக் கூறுகின்றது.

ஒன்ராறியோ மாகாண மனித உரிமை ஆணைக்குழுவின் தலைமை அலுவலகம் 400 University Ave. வின் 11ம், 12ம் மாடிகளில் அமைந்துள்ளது.

றொரன்ரோ மத்திய அலுவலக முகவரி: 595 Bay St. Toronto, Ontario, M5G 3C2 (Phone:326-9511)
ஸ்காபரோ அலுவலக முகவரி: 2500 Lawrence Avenue East, Scarborough, Ontario, M1P 2R7 (Phone:750-3575)
மிஸிஸாக அலுவலக முகவரி: 2 Robert Spek Parkway, L4Z 1H8 (Phone:273-7811)
வேலையற்றவர் காப்புறுதி தொடர்பான விபரங்களுக்கான தொலைபேசிச் செய்திச் சேவையின் இலக்கம்: 730-1211

-நாதன் ஸ்ரீதரன்

# லான்ட்ஸ்ரவுன் தமிழர் கூட்டுறவு மாடிமனை இல்ல இயக்குனர் சபைக்கு இரு பெண்கள் தெரிவு

றொறன்ரோ லான்ட்ஸ்ரவுண் தமிழர் கூட்டுறவு மாடிமனை இல்லத்தின் இயக்குனர் சபைக்கு கடந்த மாதம் நடைபெற்ற தேர்தலின் மூலம் இரண்டு பெண்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி சபையில் இயக்குனர்களாக முன்னர் பதவி வகித்த திரு. டானியல், திருமதி. மணி பத்மராஜா (செயலாளர்) ஆகியோரின் பதவிக்காலங்கள் முடிவடைந்ததையடுத்து இந்தத் தெரிவு நடைபெற்றது.

திருமதி. மணி பத்மராஜா மீண்டும் போட்டியிட்டு தெரிவாகியுள்ளார். திருமதி. வசந்தா டானியல் புதிதாகத் தெரிவாகியுள்ளார்.

ஸ்காபரோ தமிழர் கலாசார நிலையத்தின் தலைவராகப் பணிபுரியும் மணி பத்மராஜா, பல்வேறு தமிழர் அமைப்புகளிலும் முக்கியமான பதவிகளை வகித்து வருகின்றார். ஆங்கிலத்தை இரண்டாவது மொழியாக கற்பிக்கும் சேவையில் ஈடுபட்டுள்ள இவர், முழு நேர வங்கி ஊழியராவார். இலங்கையில் முன்னர் ஆசிரியராகப் பணி புரிந்தவர்.

வசந்தா டானியல் ஒரு புகழ்பெற்ற நடன ஆசிரியர். நடனக் கல்லூரியொன்றை நடத்தி வருகின்றார். இவரது மாணவிகள் சிலரது அரங்கேற்றமும், நடன நிகழ்ச்சிகளும் றொறன்ரோவில் நடைபெற்றுள்ளன. கலைத்துறையிலும், சமுகத் தொண்டிலும் நிரம்பிய ஈடுபாடு கொண்டவர்.

# வி.என்.நவரத்தினம் இறுதிச் சடங்கு மிஸிஸாகவில் நடைபெற்றது



றொறன்ரோவில் கடந்த ஜனவரி மாதம் 29ம் திகதி மாரடைப்பினால் மரணமான சாவகச்சேரி தொகுதியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. என். நவரத்தினம் அவர்களின் இறுதிச் சடங்கு, பெப்ரவரி மாதம் இரண்டாம் திகதி (02.02.1991) மிஸிஸாகவில் நடைபெற்றது.


இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவற்றின் அங்கத்தவராகவிருந்து, ஆறு பொதுத் தேர்தல்களில் போட்டியிட்டு வெற்றிபெற்று 27 ஆண்டுகள் பாராளுமன்ற உறுப்பினராக விருந்த பெருமை இவருக்குண்டு. 1956ம் ஆண்டிலிருந்து 1983ம் ஆண்டுவரை சாவகச்சேரி தொகுதியின் எம்.பியாகவிருந்த இவர்,. இலங்கை பாராளுமன்ற வரலாற்றில் நீண்டகாலம் எம்.பி. யாகவிருந்த ஒரேயொரு வடபகுதி உறுப்பினராவர்.

"வி.என்" என்ற இரு எழுத்துக்களில் புகழ்பெற்ற இவர், பெயர் பெற்ற அட்வக்கேட்டாகவும் தொழில் புரிந்துள்ளார். சர்வதேச பாராளுமன்றங்களின் அமைப்பின் நிறைவேற்றுக் குழுவில் பல வருடங்கள் இடம்பெற்ற ஒரேயொரு தமிழ் எம்.பி யும் இவரே. தமிழினப் போராட்டங்களில் பங்குபற்றி பல தடவை சிறை சென்றுள்ளார்.

கனடாவில் கடந்த ஒரு வருடமாக இலங்கைத் தமிழர்களின் குடிவரவு, அகதி விசாரணை ஆகியவைகளில் ஆஜராகி வந்துள்ளார். இவருக்கு மனைவியும், மூன்று புதல்வர்களும், ஒரு புதல்வியும் உண்டு. இந்து சமய முறைப்படி இறுதிக் கிரிகைகள் நடைபெற்று, பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மணவறை, பூமாலை,
சடைநாகம், தலைநாகம்,
தலைப்பாகை,
மணப்பெண் அலங்காரம்,
பந்தல் அலங்காரம்,
கல்யாண மண்டபம்,
கல்யாண அழைப்பிதழ்,
கல்யாண
பூசைப்பொருட்கள்,
கல்யாணப் பலகார,
உணவு வகைகள்,
நாதஸ்வரம், தவில்,
படப்பிடிப்பு,
Van Moving ஆகிய அனைத்துச்
சேவைகளையும் ஒரே இடத்தில்
வழங்குகின்றோம்.

திருமணப் பதிவு, திருமணம்,
புதுமனை புகுதல், கடைதிறப்பு வைபவம்,
புண்யாக வாசனம்,
சிரார்த்தம் (திவசம், வீட்டுக் கிரிகை)
பூப்புனித நீராட்டு மங்கள வைபவம்,
அனைத்தையும் வேதாகம விதிமுறைப்படி
நிறைவேற்றுகின்றோம்.

இவற்றுடன் ஜனன பலன், ஜோதிடம், நாள்
பார்த்தல், விவாகப் பொருத்தம்
ஆகியவைகளையும் நாம் கவனிக்கிறோம்.
ஆலய விழாக்களுக்கான சப்ரம்,
பூமாலைகளுக்கும் எம்முடன்
தொடர்பு கொள்ளவும்.

**பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள்**
**(416) 285-0974**

**ஸ்ரீநிவாச சர்வானந்த குருக்கள்**
**(416) 759-7733**

முகவரி
**84 Bertrand Ave. Scarborough,**
**Ontario. M1K 2S6**

# ஏ.கே.
# இன்டர்நாஷனல்

## *பலசரக்கு மாளிகையும்*
## *வீடியோ, திரைப்பட*
## *விநியோக நிலையமும்*

இலங்கை இந்தியாவிலிருந்து
இறக்குமதி செய்யப்பட்ட
உணவுப் பொருட்களும்
கனேடிய பல்வகை உணவுப்
பொருட்களும், தமிழ் சஞ்சிகைகள்,
இலங்கைப் பத்திரிகைகள், தரமான
வீடியோ திரைப்படங்களும்
எங்களிடம் கிடைக்கும்.

திருமண வைபவங்களுக்குத் தேவையான



முத்து மணவறை
மற்றும்
தலையலங்காரப்
பொருட்களையும்
பெற்றுக்
கொள்ளலாம்.

இட மாற்ற சேவைகளும் (Moving)
செய்து தரப்படும்.

# A.K.
# INTERNATIONAL

**GROCERS & VIDEO MOVIES**
**4 Wade Ave., Toronto**

# (416) 536-2220


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதிகளுக்கு வழங்கப்படும் இலவச சட்ட உதவி (Legal Aid) எவ்வாறு, எங்கே, எப்படிப் பெறுவது?

கனடாவுக்கு வந்து அகதி அந்தஸ்துக் கோரி இருப்பவர்களின் விண்ணப்பங்களைத் துரிதமாக விசாரணை செய்து முடிவு காணும் பொருட்டும், விசாரணைகளின் போது அகதிகளுக்கு வீண் கஷ்டங்கள் ஏற்படாமல் இருப்பதற்காகவும், கனடிய அரசாங்கம் சில வசதிகளை ஏற்படுத்தியுள்ளது. அவற்றில் ஒன்று, கனடிய சட்ட வல்லுனரான பாரிஸ்டர் (Canadian Barrister) ஒருவரை நியமித்து, அவரது கட்டணத்தையும் (Fees) கொடுத்து, அகதிகளின் கோரிக்கை மனுக்களை விசாரிப்பதற்கு அவர்களுக்கு இலவச சட்ட உதவி (Legal Aid) வழங்குவதாகும். பொதுவாக அனைவரும் இதனை தமிழிலும் "லீகல் எய்ட்" என்றே கூறுவர். இந்த உதவியை எவ்வாறு பயன்படுத்தலாம் என்று அறிந்து வைத்திருப்பது ஒவ்வொருவருக்கும் பிரயோசனம் தருவதாகும்.

கனடாவில் நீங்கள் முதன் முதலாக அடியெடுத்து வைக்கும் நிலையம், விமான நிலையம் அல்லது எல்லைப்புறக் கடவை நிலையமாகவிருக்கும். இங்கே வைத்து நீங்கள் அகதி அந்தஸ்து கோரினால், அந்த முதல் விசாரணையின் முடிவில் உங்களின் விசாரணையை நடத்துவதற்கு நீங்களே ஒழுங்கு செய்ய முடியுமா? அல்லது அரசாங்கம் பாரிஸ்டர் ஒருவரை ஏற்படுத்தி உதவி செய்து தரவேண்டுமா என்று அதிகாரி கேட்பார். உங்களால் ஒழுங்கு செய்ய முடியுமென்றால் சரி. இல்லையென்றால் எவ்வித தயக்கமும் இல்லாமல் அரசாங்கம் ஏற்படுத்தித் தரவேண்டும் என்று சொல்லலாம்.

சிலர் கனடாவுக்குள் வந்து இருந்து விட்டுப் பின்னரே அகதி அத்தஸ்துக் கோருகின்றனர். இவ்வாறு செய்பவர்கள் கனடா குடிவரவு நிலையம் (Immigration Office) ஒன்றுக்குச் சென்று, அங்கு தமக்கு அகதி அந்தஸ்துக் கோருவார்கள். இங்கு நடக்கும் முதல் விசாரணையின் போது சட்ட வல்லுனர் ஏற்படுத்த அரசாங்க உதவி வேண்டுமா என்று அதிகாரி கேட்க மாட்டார்.

மேற்படி இருதரப்பினரும் தாங்களே பாரிஸ்டர் ஒருவரை வைத்து விசாரணையை நடத்த முடியுமானால் நடத்தலாம். இல்லையென்றால் அரசாங்க சட்ட உதவி அலுவலகம் - "லீகல் எய்ட்" அலுவலகம் (Legal aid office) ஒன்றுக்குச் சென்று உதவி கேட்கலாம். ஒன்ராறியோ அரசாங்கம் லீகல் எய்ட் அலுவலங்களை பின்வரும் இரண்டு இடங்களில் அமைத்துள்ளது.

1) 70 Centre Avenue, Toronto, Ontario M5G 2E7

2) 131 Brunnel Road, Mississauga, Ontario L4Z 1X3

இவைகள் இரண்டில் ஏதாவது ஒன்றுக்குச் சென்று உதவி கேட்கலாம்.

லீகல் எய்ட் அலுவலகத்துக்குச் செல்லும் போது உங்களுக்கு விருப்பமான கனடிய பாரிஸ்டர் ஒருவரிடமிருந்து சிபார்சுக் கடிதம் ஒன்றைப் பெற்றுக் கொண்டு சென்றால் அனுகூலமாகவிருக்கும்.

இவ்வாறான அரசாங்க உதவிபெறும் விசாரணைகளை, அகதிநிலை கோரிக்கையாளர்கள் சார்பில் இலவசமாக நடத்திக் கொடுப்பதற்கு இணங்கிய கனடிய பாரிஸ்டர்களின் பெயர்ப் பட்டியலை லீகல் எய்ட் அதிகாரிகள் வைத்திருக்கின்றனர். இவர்களிடம் விசாரணைகளை ஒப்படைத்து, அதற்கான செலவுக் கட்டணத்தையும் (Fees) அரசாங்கமே வழங்குகின்றது. இவர்களுக்கான கட்டணத்தை அரசாங்கம் வழங்கினாலும், தங்களிடம் ஒப்படைக்கப்பட்டவர்களின் விசாரணைகளை கனடிய பாரிஸ்டர்கள் வென்று கொடுப்பதில் கண்ணும் கருத்துமாக இருப்பார்கள். அரசாங்க தரப்புக்குச் சலுகைகாட்டி விட்டுக் கொடுத்து விடுவார்கள் என்ற ஐயப்பாடு எள்ளளவேனும் இருக்கத் தேவையில்லை.

ஜெகன் என். மோகன் LL.B.
பாரிஸ்டர் & சொலிஸிட்டர்

லீகல் எய்ட் அலுவலகம் உங்களுக்கு உதவி வழங்க ஒப்புக் கொள்ளும் பட்சத்தில், தங்கள் பட்டியலில் இருந்து கனடிய பாரிஸ்டர் ஒருவரை நியமித்து, அவரிடம் செல்லுமாறு உங்களுக்கு அத்தாட்சி பத்திரம் (Legal aid certificate) ஒன்று தருவார்கள். அந்தப் பத்திரத்தை எடுத்துக் கொண்டு, குறிப்பிட்ட பாரிஸ்டரை நீங்கள் சென்று சந்தித்து, உங்கள் அகதிநிலை கோரிக்கை பற்றிய முழு விபரங்களையும் எடுத்துக் கூற வேண்டும். இதற்காக நீங்கள் எந்தக் கட்டணமும் வழங்கத் தேவையில்லை.

சில சமயங்களில், லீகல் எய்ட் அலுவலகம் நியமித்து தந்த பாரிஸ்டர் மீது அதிருப்தி கொள்ளுபவர்களும் உண்டு. இவ்வாறு அதிருப்தி ஏற்பட்டால், அது அகதி விளக்கம் ஆரம்பமாவதற்கு முன்னராயினும் சரி, அல்லது தொடங்கி நடுவழியிலாயினும் சரி நியமிக்கப்பெற்ற பாரிஸ்டரை மாற்ற முடியாதென்று நினைத்து தங்கள் விசாரணை முடிவு என்னவாகுமோ என்று பயத்துடன் இருக்க வேண்டியதில்லை. நியமிக்கப்பட்ட பாரிஸ்டர் மூலமே நீங்கள் விசாரணையை நடத்தக் கட்டுப்பட்டவர் எனறு கருதக் கூடாது. அவ்வாறு கருதுவது தவறாகும். எந்த வேளையிலும், நீங்கள் விரும்பும் கனடிய பாரிஸ்டர் ஒருவரை அணுகி உங்கள் விசாரணையைப் பொறுப்பேற்று நடத்தித் தருமாறு நீங்கள் கேட்கலாம். இவரை நீங்கள் கண்டு, உங்கள் விசாரணையைப் பொறுப்பேற்று நடத்தித் தருமாறு தெரிவித்தால், இவர் உங்களின் முன்னைய பாரிஸ்டரோடு தொடர்பு கொண்டு, அவர் சார்பில் நீங்கள் விரும்பும் பாரிஸ்டரே விசாரணையை நடத்த ஏற்பாடு செய்து கொள்வார்கள். இதற்காக நீங்கள் பணம் எதுவும் கொடுக்க வேண்டியதில்லை.

Refugee Backlog எனப்படும் தேக்கநிலையிலுள்ள அகதிகளான விண்ணப்பதாரர்கள் பலர் இங்கு உள்ளனர். இவர்களின் விளக்கங்களைத் துரிதப்படுத்தி முடிவு காணும் பொருட்டு, குடிவரவு அமைச்சு திட்டமொன்றை நடைமுறைப்படுத்தி வருகின்றது. இவர்கள் எந்த வேளையிலும் விசாரணைக்கு அழைக்கப்படக் கூடும். இவர்களில் அநேகமானவர்களும் வேலை செய்வதற்கான அனுமதிப் பத்திரம் (Work Permit) பெற்றவர்களாகவும், வேலை செய்பவர்களாகவும் இருப்பதால் உதவி தேவைப்படாதவர்கள் அல்லது உதவி பெற முடியாதவர்கள் என்று கருதுகிறார்கள்.

ஆனால் வேலை இல்லாதவர்களும், அரசாங்க பொது உதவிப் பணம் (Welfare) பெற்றுச் சீவிப்பவர்களும் தங்கள் அகதி விண்ணப்ப விசாரணையை நடத்துவதற்கு லீகல் எய்ட் உதவியைக் கோரலாம். இதற்காக லீகல் எய்ட் அலுவலகம் ஒன்றுக்கு நேரில் சென்று விண்ணப்பம் செய்ய வேண்டும். போகும் போது கனடிய பாரிஸ்டர் ஒருவரின் சிபார்சுக் கடிதத்தையும் கொண்டு சென்றால் அனுகூலாமகவிருக்கும். லீகல் எய்ட் அலுவலகம் உதவி வழங்க ஒப்புக் கொண்டால், கனடிய பாரிஸ்டர் ஒருவரை நியமித்து, நிபந்தனை இருக்குமானால் அதனையும் தெரிவித்து, அத்தாட்சிப் பத்திரம் வழங்குவார்கள். இதனை உங்களுக்கான பாரிஸ்டரிடம் கொண்டு சென்று வழங்க வேண்டும். இதற்காக நீங்கள் பணம் எதுவும் செலுத்த வேண்டிய தேவையில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடா குடிசன மதிப்பீடு ஜூன் மாதம் 4ம் திகதி விபரசேகரிப்பு மே மாதம் கடைசி வாரம்

கனடிய அரசாங்கம் ஐந்தாண்டு காலத்துக்கு ஒரு தடவை மேற்கொள்ளும் உத்தியோகபூர்வமான குடிசன மதிப்பீடு, புள்ளி விபரசேகரிப்பு இந்த வருடம் மே மாதத்தின் கடைசி வாரத்தில் நடைபெறவுள்ளது. இந்த வேலையை உரிய முறையில் மேற்கொள்ளவென 253 மில்லியன் டாலர்களை கனடிய அரசு ஒதுக்கியுள்ளது.

June 4
CENSUS DAY

ஏறத்தாழ 38,000 மதிப்பீடு செய்யும் ஊழியர்கள் இந்தப் பணியில் ஈடுபடுத்தப் படவுள்ளனர்.

உலகின் பல பாகங்களிலிருந்தும் வந்துள்ள பல இன மக்கள் கனடாவில் வாழுகின்றனர். கடைசியாக குடிசன மதிப்பீடு 1986ம் ஆண்டில் நடத்தப்பட்டது. கடந்த ஐந்து ஆண்டுகளில் லட்சக் கணக்கான புதியவர்கள் இங்கு வந்து குடியேறியுள்ளனர்.

இவர்கள் யார்? எங்கே வசிக்கிறார்கள்? இவர்கள் எங்கே வேலை செய்கின்றார்கள்? இவர்களின் மாதாந்த வருமானம் எவ்வளவு? என்ன மொழி பேசுகிறார்கள்? எந்த மதத்தைக் கடைப்பிடிக்கிறார்கள்? திருமணமானவர்களா? பிள்ளைகள் உண்டா? போன்ற பல விபரங்களை குடிசன மதிப்பீட்டு ஊழியர்கள் கேட்டுப் பெறுவார்கள்.

இங்குள்ள குடியிருப்புமனைகள், தனியார் வீடுகள் போன்ற விபரங்களும் இதன் போது சேகரிக்கப்படும். இதற்கென தனியான மதிப்பீட்டுப் பத்திரம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் மொத்தம் 56 கேள்விகள் அடங்கியிருக்கும்.

1986ம் ஆண்டின் கணக்கெடுப்பின் போது சுமார் எட்டு லட்சம் பேர் அதிலிருந்து தவறவிடப்பட்டதாக இப்போது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இவ்வாறான தவறுகள் இம்முறை இடம்பெறாதிருக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. தற்போது சுமார் 26 மில்லியன் மக்கள் இங்கிருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

கனடாவில் வாழும் தமிழர்களைப் பொறுத்தளவில் இந்தக் குடிசன மதிப்பீடு முக்கியமான ஒன்றாகும். இங்குள்ள தமிழர்கள் பற்றிய சரியான தொகையை அறியவும், அவர்களது வாழ்க்கை முறை, குடும்ப நிலை ஆகியன பற்றி தெரியப்படுத்தவும் இது ஒரு அருமையான சந்தர்ப்பமாகும்.

குடிசன மதிப்பீட்டு நாளாக ஜூன் 4ம் திகதி செவ்வாய்க்கிழமை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

முதற்தடவையாக இங்கு அகதிகளாகவுள்ளவர்கள், MINISTER'S PERMIT எனப்படும் அமைச்சரின் பத்திரத்தில் இருப்பவர்கள் அனைவரதும் விபரங்கள் இவ்வருடக் குடிசன மதிப்பீட்டில் சேர்க்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.

குடிசனமதிப்பீட்டிற்குச் சேகரிக்கப்படும் விபரங்கள் அந்தரங்கமாக வைத்திருக்கப்படும் என்றும் அது தவிர வேறெந்த தேவைக்கும் பயன்படுத்த எவருக்கும் வழங்கப்படமாட்டாது என்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## விறுவிறுப்பான பிரிட்ஜ் ஆட்டத்தில்



றொறன்ரோ மூத்ததமிழர் மன்றம் எட்வட் ஞானரத்தினம் விருதுக்காக வருடாவருடம் பிரிட்ஜ் போட்டியொன்றை நடத்தி வருகின்றது. இந்த வருடத்துக்கான போட்டி ஜனவரி மாதம் 19ம் திகதி நடத்தப்பட்டது. தனிப்பட்ட(individual) போட்டியில் சில மூத்ததமிழர்கள் மிகவும் சுவாரஸ்யமாகவும், விறுவிறுப்பாகவும் ஈடுபட்டிருப்பதை மேலுள்ள படங்களில் பார்க்கலாம்.

உள்நாட்டில், தாய்நாட்டில்
வெளிநாட்டில் இடம்பெறும்
முக்கிய நிகழ்ச்சிகளை
முந்தி அறிந்திட

ஈழத் தமிழர் தகவல் நிலைய
24 மணி நேர செய்திச் சேவை

963-8119

வாரத்தின் ஏழு நாட்களிலும்
கேட்கலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து ஆலய உற்சவங்கள்

ரொறன்ரோ றிச்மன்ட் ஹில் இந்து ஆலய மார்ச் மாத விசேட உற்சவங்கள் வருமாறு:

12ம் திகதி: சரவண உற்சவம் (பெருமாள்)
13ம் திகதி: காரடியார் நோன்பு (ஆகம சிவராத்திரி)
15ம் திகதி: அமாவாசைத் தினம்
17ம் திகதி: தெலுங்கு கன்னட புத்தாண்டு தினம்
19ம் திகதி: சக்தி கணபதி விரதம்
20ம் திகதி: கார்த்திகை விரதம் சண்முக அர்ச்சனை
24ம் திகதி ஸ்ரீராம நவமி
27ம் திகதி: பிரதோஷம்
29ம் திகதி: பங்குனி உத்தரம் - பூரணை தினம்.

## தமிழில் ஆராதனை

*ஒன்ராறியோ, டவுன்ஸ்வியுவில் Sheppard Avenue West 1875ம் இலக்கத்தில் அமைந்துள்ள இமானுவல் தமிழ் நசரேயன் திருச்சபையில் தமிழில் உடன்படிக்கை ஆராதனை நடைபெறுகின்றது. மார்ச் மாத ஆராதனை நடைபெறும் விபரங்கள்*

3 ஞாயிறு பிற்பகல் 3.30 மணி
17 ஞாயிறு பிற்பகல் 3.30 மணி
29 வெள்ளி - காலை 10.00 மணி (பெரிய வெள்ளி ஆராதனை)
31 ஞாயிறு பிற்பகல் 3.30 மணி (ஈஸ்டர் ஞாயிறு ஆராதனை)

*மேலதிக விபரங்களை 494-6714 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெறலாம்.*

## இளம்பெண்கள் கவனத்துக்கு

*கனடாவிலுள்ள பெண்களில் ஆறு பேரில் ஒருவர் வறுமையால் வாடுகிறார். தனிமையில் வசிக்கும் இளந் தாய்மாரே இவர்களில் அநேகர். பத்துப் பெண்களில் ஒருவர் இருபது வயதுக்கு முன்னர் கர்ப்பிணியாகிறார். விவாகரத்துப் பெற்ற பெண்களில் 75 வீதமானவர்களும் பிள்ளை பராமரிப்பு நிதி உதவியால் ஒரு சதம் கூடப் பெறுவதில்லை. அண்மையில் சேகரிக்கப்பட்ட புள்ளி விபரமொன்றின்படி நான்கு பெண்களில் ஒருவர் என்ற வீதம், அவர்களது வாழ்நாளில் எப்போதாவது பாலியல் வன் முறைக்குட்படுத்தப்படுகின்றனர்.*

*16 வயதுக்கும் 21 வயதுக்குமிடைப்பட்ட பெண்கள் பங்கு பற்றுவதற்கான பல நிகழ்ச்சித் திட்டங்களை ஸ்காபரோ பெண்கள் நிலயம் The Scarborough Women's Centre ஒழுங்கு செய்துள்ளது.*

*ஏப்ரல் 24ம் திகதி தொழில் விடயங்கள். மே 1ம் திகதியும், 8ம் திகதியும் - தொடர்பு விவகாரம். மே 15ம் திகதி - உடல் நலம். மே 22ம் திகதி - இன்றைய உலகின் பெண். இதில் பங்கு பற்ற விரும்புவோர் 431-1138 இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவு செய்யலாம்.*

# 1990ல் 270 இலங்கையரின் அகதிநிலை மனுக்கள் பூரண விசாரணையின் பின்னர் நிராகரிக்கப்பட்டன

# 270 SRILANKAN CASES REJECTED IN 1990

1989ம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதிக்குப் பின்னர் கனடாவுக்கு வந்து அகதிநிலை கோரியவர்களில் இலங்கையர்களே மிகக் கூடுதலானவர்கள் என்று கனடிய குடிவரவு அகதிகள் சபையின் புள்ளிவிபர அறிக்கை தெரிவிக்கின்றது. 1990 டிசம்பர் மாதம் 31ம் திகதி வரையிலான 24 மாதங்களில் கனடாவுக்கு வந்த இலங்கையர்களில், 3645 பேரின் அகதிநிலைக்கான முதற்கட்ட விசாரணைகள், 1990ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் டிசம்பர் வரையிலான 12 மாதங்களில் முடிவடைந்துள்ளது.

மேற்படி விடயம் தொடர்பான விரிவான அறிக்கையொன்று கனடிய குடிவரவு அகதிகள் சபையினால் 1991ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 1ம் திகதியன்று வெளியிடப்பெற்றது. இதில் இலங்கையிலிருந்து வந்த அகதிகளின் விசாரணை தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ள விபரங்கள் வருமாறு:-

1990ம் ஆண்டின் பன்னிரண்டு மாதங்களிலும் 3645 இலங்கையர்களின் முதற்கட்ட அகதிநிலை விசாரணை முடிவடைந்துள்ளது. இதில் 3 பேர் தங்கள் கோரிக்கையை வாபஸ் பெற்றுள்ளனர். 3636 பேரின் மனுக்குள் நம்பத்தகுந்தவை (Credible) என்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. ஆறுபேரின் மனுக்கள் இந்த மட்டத்தில் நிராகரிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட அதே பன்னிரண்டு மாத காலப்பகுதியில், 2694 இலங்கையரின் மனுக்கள் பூரண விசாரணைக்குப் பாரப்படுத்தப்பட்டு எடுக்கப்பட்டுள்ளன. இதில் 30பேர் தங்கள் மனுக்களை வாபஸ் பெற்றுள்ளனர். 2302 பேரின் மனுக்கள் பூரண விசாரணையின் முடிவில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி பூரண விசாரணைக்குள்ளானவர்களில் 270 பேரின் மனு நிராகரிக்கப்பட்டது இங்கு சுட்டிக் காட்டப்பட வேண்டியது.

1990ம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களிலும் பூரண விசாரணையின் பின்னர் 164 பேரின் மனுக்கள் மட்டுமே நிராகரிக்கப்பட்டிருந்தன. ஆனால் கடைசி மூன்று மாதங்களிலும் 106 பேர் நிராகரிக்கப்பட்டுள்ளனர் என்பதை இந்தப் புள்ளி விபரங்கள் தெரியப்படுத்துகின்றன.

1990ம் ஆண்டின் 12 மாதங்களிலும், முதற்கட்ட விசாரணையிலும், பூரண விசாரணையிலும் நிராகரிப்புக்குள்ளான இலங்கையரின் தொகை (6+270) 276 என்பதை இந்தப் புள்ளிவிபர உத்தியோகபூர்வ அறிக்கையின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

நாடுகள் வாரியாக பொதுவாக இலங்கையர் என்று இங்கு குறிப்பிடப்பட்டுள்ளதாயினும், இவர்களில் 95 வீதத்துக்கு அதிகமானவர்களும் தமிழர்கள் என்பது கவனிக்கப்பட வேண்டியதாகும்.

அதேசமயம் கனடாவுக்கு வந்து அகதியுரிமை கோருபவர்கள், ஏற்கப்படுபவர்கள், ஆகியவைகளிலும் கூட இலங்கையர்களே முன்னணியில் நிற்பதை இந்தப் புள்ளி விபர அறிக்கை காட்டுகின்றது. அதனைப் பின்வருமாறு பார்க்கலாம்.

1990ம் ஆண்டில் முதற்கட்ட விசாரணையை பூர்த்தி செய்தவர்கள்:- இலங்கை -3645; சோமலியா 2768; சீனு-2503; லெபனுன்-1942; எல்சல்வடோர்-1860; ஈரான்-1680

1990ம் ஆண்டில் பூரண விசாரணையைப் பூர்த்தி செய்தவர்கள்: இலங்கை-2694; சோமலியா-2575; லெபனுன்-1817; சீனு-1442; எல்சல்வடோர்-1327; ஈரான்-1260.

1990ம் ஆண்டில் பூரண விசாரணையைப் பூர்த்தி செய்தபின் ஏற்கப்பட்டவர்கள்:- இலங்கை-2302; சோமலியா-2318; லெபனுன்-1401; ஈரான்-1095; எல்சல்வடோர்-946; சீனு-485.

இந்தப் புள்ளி விபரங்களின் படி சீன நாட்டவர் 600 பேரின் மனு பூரணவிசாரணையின் பின்னர் நிராகரிக்கப்பட்டுள்ளது. நாடுகள் ரீதியாகப் பார்க்கையில் நிராகரிப்பில் சீனுவே முதலிடம் பெறுகின்றது.

(மேற்குறிப்பிட்ட புள்ளி விபரத் தகவல்கள் 1989ம் ஆண்டு ஜனவரி மாதம் 1ம் திகதிக்குப் பின்னர் கனடாவுக்கு வந்து, C55 என்ற கனடிய குடிவரவு சட்ட விதிகளின் கீழ் விசாரணைக்குட்படுத்தப்பட்டவர்கள் பற்றியது. Backlog எனப்படும் தேக்கநிலை அகதிகள் சம்பந்தப்பட்டவை அல்ல என்பதை கவனத்தில் வைத்திருக்கவும்.)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடா மூத்த தமிழர் மன்றத்தின் நத்தார் விழாக் காட்சிகள் சில



1984ம் ஆண்டு முதல் ரொறன்ரோவில் இயங்கிவரும் மூத்த தமிழர் மன்றத்தின் வருடாந்த நத்தார்விழா இம்முறை வெகுசிறப்பாக ஒறியோல் சனசமூக நிலையத்தில் நடைபெற்றது. மூத்த தமிழர்கள் சேர்ந்து வழங்கிய யேசுவின் வாழ்வை சித்தரிக்கும் கலைநிகழ்ச்சி அனைவரது வரவேற்பையும் பெற்றது. 246 அங்கத்தவர்களுடன் இயங்கும் மூத்ததமிழர் மன்றமே, கனடாவில் வாழும் தமிழர் அமைப்புகளில், செயற்படும் அங்கத்தவர்களை அதிகமாகக் கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது. மேற்படி மன்றத்தின் அண்மைய நத்தார் விழாவில், நத்தார் சம்பவம் என்ற நிகழ்ச்சியில் இடையராக வந்து யேசுபாலனை வணங்கிய சில மூத்த தமிழர்களை முதற் படத்தில் காணலாம். இவ்வைபவத்தில் பங்குபற்றிய மூத்த தமிழர்கள், அவர்களது குடும்பத்தினர், குழந்தைகள், நண்பர்கள் கீழுள்ள படங்களில் காணப்படுகின்றனர்.





# கனடிய அரசாங்கத்தின் சட்டங்களைக் கண்டித்து கந்தசாமி கனடாவை விட்டு வெளியேறினர்

கனடிய அரசு இந்த நாட்டுச் சட்ட விதிகளுக்கமைய, இங்கு அகதிகளாக வருபவர்கள் மீது உரிய விசாரணைகளை நடத்தி, அவர்களில் நிராகரிக்கப்படுபவர்களை நாடு கடத்த நடவடிக்கைகளை எடுத்துவருகின்றது. சிலர் நாடுகடத்தப்பட்டுமுள்ளனர்.

ஒருபுறத்தில் இவ்வாறு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கையில், மறுபுறத்தில் மனுநிராகரிக்கப்பட்ட தமிழர் ஒருவர், கனடிய அரசாங்கத்தின் நடைமுறைகளைக் கண்டிக்கும் வகையில் தாமாகவே கனடாவை விட்டு வெளியேறியுள்ளார். சாவகச்சேரியில், மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரான சின்னையா கந்தசாமி (47 வயது) என்பவரே இவ்வாறு கடந்த மாதம் வெளியேறியவராவார்.



1989ம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதலாம் திகதி கனடாவுக்கு வந்த கந்தசாமி அவர்கள், இங்கு அகதிநிலை கோரிக்கை மனுவைச் சமர்ப்பித்தார். இந்திய அமைதிப் படையினரால் பல்வேறு துன்பங்களுக்குள்ளாக்கப்பட்டதை இவர் தமது மனுவில் விபரமாகக் குறிப்பிட்டிருந்தார். 1989ம் ஆண்டு 20ம் திகதி இவரது மனுவின் மீதான விசாரணை நடைபெற்றது. அதே வருடம் ஆகஸ்ட் மாதம் 14ம் திகதி இதற்கான தீர்ப்பு வழங்கப்பட்டது. தமது மனு நிராகரிக்கப்பட்டதையிட்டு இவர் மேன் முறையீட்டுக்கு 'லீவ்' மனு அனுப்பியிருந்தார்.

கனடிய குடிவரவுச் சட்ட முறையும், விசாரணை ஏற்பாடுகளும் உண்மையான அகதிகள் தங்களின் நிலைமையைச் சரியாக எடுத்துக்கூற சந்தர்ப்பமளிப்பதாகவில்லை என்று திரு. கந்தசாமி நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு முன்னர் தெரிவித்தார்.

"எனது மனைவியையும் பிள்ளைகளையும் இரண்டு வருடங்களாகப் பிரிந்து வாழ்கிறேன். அங்கு அவர்களுக்கு என்ன நடந்ததோ..... அவர்கள் உயிருடன் இருக்கிறார்களோ என்பதையே அறிய முடியவில்லை. இந்த நிலையில், அகதிநிலையே நிராகரிக்கப்பட்டவனாக கனடாவில் வாழ்வதை விட, ஊருக்குப்போய் குடும்பத்துடனிருந்து செத்தாலும் கூடப் பரவாயில்லை" என்று அவர் தமது நண்பர்களிடம் தெரிவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசின் மனித உரிமை மீறல்கள் பற்றி ரொறன்ரோ நகரில் நடந்த கருத்தரங்கில் விபரிப்பு

தொகுப்பு:
தென்புலோலியூர் கிருஷ்ணலிங்கம்

மனித உரிமைகள் மீறல் ஐக்கியநாடுகள் சாசன ஜெனிவா 47வது அமர்வைக் குறிக்குமுகமாக பிலிப்பைன்ஸ்-இலங்கை-கொரியா மனித உரிமைகள் ஒருங்கிணைப்பு முன்னணியினால் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டம் கடந்த மாதம் 11ந் திகதி ஸ்பைடைனா ட்ரினிற்றி பாராளுமன்ற உறுப்பினர் டன்ஹீப் அவர்கள் தலைமையில் ரொறன்ரோ United Church Hall இல் இடம்பெற்றது. மனித உரிமை மீறல்கள் சம்பந்தமாக பிலிப்பைன்ஸ்-கொரியா ஆகிய நாடுகள் பற்றி திருமதி. கொனி சோரியோ, திரு.சுங் ஹக்பில் ஆகியோரும் இலங்கை சம்பந்தமாக வண. ரெறி பிறவுண், திருமதி. அல்ஜி ஆகியோரும் உரை நிகழ்த்தினர். இவர்கள் இருவரும் அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்தவர்கள் என்பதும் விரைவில் மீண்டும் இலங்கை செல்லவிருப்பதும் குறிப்பிடத்தக்கது. வண ரெறி பிறவுண் ஆற்றிய உரையின் சுருக்கம் பின்வருமாறு:-

"தமிழர்களின் பிரச்சனையைத் தீர்த்து வைப்பதில் இலங்கை அரசு ஆர்வம் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. இன்றைய நடவடிக்கைகளை நோக்கும் போது இராணுவத் தீர்வையே அது பெரிதும் விரும்புவதாகத் தெரிகிறது. சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்குமிடையிலான மோதலாக வெளியுலகிற்கு தோன்றுமளவிற்கு இது பரிணாமம் அடைந்துள்ளது. இம் மோதல்களில் உயிர் தப்பிப் பிழைப்பதென்பதே அப்பகுதிகளில் வாழும் தமிழர்களின் பிரதான கடமையாக இன்று உள்ளது. ஏன்தான் அரசு தமிழ்ப் பகுதிகளில் பாடசாலைகள், வணக்கத் தலங்கள் போன்றவற்றிற்கு குண்டு வீச்சு நடத்துகிறதோ தெரியவில்லை. இன்று தமிழர் பகுதிகளில் ஏற்பட்டுள்ள சேதங்களை நோக்கும் போது, அழிவு இரண்டாவது உலகப்போரை விட மோசமானதாக உள்ளது எனலாம். இலங்கைக்கு வெளியே அகதிகளாக உள்ளவர்கள் புறநீங்கலாக, இன்று தமிழ்ப்பகுதிகளில் 16 பேருக்கு ஒருவர் சகலத்தையும் இழந்து உள்நாட்டு அகதிகளாக உள்ளனர்.

தற்போதைய போரில் முக்கிய பங்கு வகிக்கும் தமிழ் இளைஞர்களை நோக்கும் போது மிகவும் வேதனையாக உள்ளது. வயதில் மிகவும் குறைந்த சிறுவர்கள் கூட சீருடையுடன் கைகளில் நவீன ஆயுதங்களை ஏந்தி தமது இலட்சியத்துக்காகப் போராடுகிறார்கள். (சில புகைப்படங்களையும், ஆங்கில சஞ்சிகைகளிலுள்ள படங்களையும் காண்பிக்கிறார்.) உணவோ, மருத்துவ வசதிகளோ எதுவும் அரசால் அளிக்கப் படாத நிலையில் அடிப்படைத் தேவைகளையே நிறைவேற்ற முடியாது மக்கள் அல்லற்படுவதை அறியக் கூடியதாக இருந்தது.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட யுத்த நிறுத்தம் முறிக்கப்பட்டதை நியாயப்படுத்த அரசு முயற்சித்திருந்தது. கிழக்கின் சில பகுதிகள் உட்பட இலங்கையில் பலர் காணாமல் போயிருப்பது கவலைக்கிடமானது. பத்திரிகைச் சுதந்திரம் மறுக்கப்படுவதால் உண்மைச் செய்திகள் வெளியே தெரியவருவது தடுக்கப்படுகிறது. தனது அரசின் மனித உரிமை மீறல்களை விசாரிக்க தானே ஒருகுழுவை நியமித்தது அரசின் வழமையான வித்தையாகும்.

மனித உரிமை மீறல்களை ஆராயும் ஜெனீவா மகாநாட்டில் எமது தேவாலயங்களைச் சேர்ந்த இரு பிரதிநிதிகள் இடம்பெற்றுள்ளனர். இவர்கள் மூலம் மேற்படி மனித உரிமை மீறல்களை வெளிப்படுத்த எமக்குச் சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. IMF, உலகவங்கி போன்றவை வறுமை ஒழிப்பு, அபிவிருத்தி போன்றவற்றிற்கு இலங்கை அரசிற்கு நிதியுதவி வழங்குகின்றன. இவற்றில் கனடிய அரசின் பங்கு பற்றி அறியாதபோதும், எமது முக்கிய கவனம் கனடிய அரசின் நேரடி உதவி யைத் தடுப்பதிலேயே உள்ளது. கனடிய அரசின் மீது அழுத்தத்தைப் பிரயோகிப்பதன் மூலம் நேரடி உதவிகளைத் தடைசெய்ய முயற்சிக்கப்படுகிறது.

இன்று கனடாவுக்கு வரும் அகதிகளில் இலங்கை அகதிகளே எண்ணிக்கையில் கூடுதலாக உள்ளனர். இவர்களை எமது அரசு கையாளும் விதம் கிரகிக்கக் கூடியதாக இல்லை. அவர்களின் மீது அரசு கடுமையாக நடந்து கொள்ளும் அதே வேளையில், அரசு அகதிகளின் நிலையைத் தீர்மானிக்கும் முறை விமர்சிக்கப் படக் கூடியதாக உள்ளது. இலங்கையில் இன்றுள்ள நிலைமையிலும் கூட "எப்படிப்பட்ட அச்சுறுத்தல்களை எதிர்நோக்குகிறீர்கள்? யாரிடமிருந்து? அவர்களை அடையாளம் காணமுடியுமா" என்றெல்லாம் கேட்கப்படுவதுடன், இலங்கையின் தென்பகுதிகளில் தமிழர்கள் பாதுகாப்பாக இருக்க முடியும் என்ற தோரணையில் திருப்பி அனுப்ப முயற்சிக்கப்படுவது புத்தியுள்ள எவராலும் ஏற்றுக் கொள்ளப்பட முடியாது.

இலங்கை அரசின் நடவடிக்கைகளை நோக்கும்போது அவர்கள் இதயசுத்தியுடன் செயற்படுவதாக தெரியவில்லை. இந்திய அரசின் நெருக்குதலின் மீது, தவிர்க்க முடியாத நிலையில், வழங்கப்பட்ட குறைந்தளவான அதிகாரங்களைக் கொண்ட ஒருவகையான சுயாட்சியைக் கூட கழுத்தறுப்பு (undercut) வேலைகளின் மூலம் ஸ்தம்பிதமடையச் செய்து, பரவலாக்கப்பட்ட அதிகாரங்களை மீண்டும் தான் கைப்பற்றிக் கொள்ள இலங்கை அரசு முயற்சிப்பது தெட்டத் தெளிவாக உள்ளது. நவீன பிரசார சாதனங்கள் மூலமாக உண்மை நிலையை மூடி மறைத்து அமைதி, ஜனநாயகம் நிலவுவதாகத் தந்திரமாகப் பிரசாரம் செய்து உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்றவற்றைத் திருப்திப் படுத்தி தனது தேவைக்கு மேற்பட்ட நிதி உதவிகளை சாமர்த்தியமாகப் பெற்றுக் கொள்கிறது. காலத்திற்குக் காலம், வெவ்வேறு தமிழ்க் குழுக்களுடன் தந்திரமாக நட்புறவு கொண்டு அவர்கள் மூலமே மற்றத் தமிழ்க் குழுக்களை அழிப்பதில் சாமர்த்தியமாகச் செயற்படுவதுடன், இலங்கை அரசு தமிழர்களையே தமிழர்களுக்குப் பலி கொடுப்பதில் வெற்றியும் கண்டிருக்கிறது.

தளத்தில் தமிழ் மக்களுக்காக களத்தில் நிற்கும் பிரதான குழுவும் ஒரே குழுவுமான புலிகள் உண்மையான, இதய சுத்தியான கண் துடைப்பற்ற, எமாற்றமளிக்காத, தமிழர் நலன்களைப் பாதிக்காத, பரந்த அதிகாரங்களைக் கொண்ட சுயாட்சியாக இருந்தால் அதை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கும் நிலைக்குத் தம்மைத் தயார் படுத்திக் கொள்ள நடவடிக்கைகளை முடுக்கி விட்டுள்ளது தெரிகிறது. மொத்தத்தில் இலங்கை அரசும், புலிகளும் தங்கள் தங்கள் வாக்குறுதிகளை நேர்மையாகப் பற்றி, காலம் வரும்போதே தமிழர் பிரச்சனைக்கும் முடிவு காண்பது நடை முறையில் வெற்றியளிக்கும்" என்று கூறி முடித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரொறன்ரோ பெற்றோர் மாநாடு ஏப்ரல் 21ம் நாள்

ரொறன்ரோ கல்விச் சபைப் பிரிவிலுள்ள பாடசாலைகளின் பெற்றோர்களின் மூன்றாவது வருடாந்த மகாநாடு ஏப்ரல் மாதம் 21ம் திகதி Bathurst Street 725ம் இலக்கத்திலுள்ள Central Technical School மண்டபத்தில் முழுநாள் நிகழ்ச்சியாக நடைபெறவுள்ளது. முன்னைய இரண்டு மாநாடுகளும் 1979ம், 1982ம் ஆண்டுகளில் நடைபெற்றன.

பெற்றோர், ஆசிரியர்கள், கல்வித் திட்ட நிர்வாகிகளிடையே நெருங்கிய தொடர்பை ஏற்படுத்த இந்த மாநாடு பெரிதும் உதவுகிறது. இம் மாநாட்டில் பங்குபற்ற விரும்பும் பெற்றோர்கள் 15 டாலர் அங்கத்துவப் பணம் செலுத்த வேண்டும். தங்கள் பிள்ளைகளின் பாடசாலை அதிபர்களுடன் தொடர்பு கொண்டால் பூரண விபரங்களையும் பெற முடியும்.

கூடுதலான தமிழ் பெற்றோர்கள் இதில் பங்கு பற்றுவது இங்குள்ள தமிழ்ப் பிள்ளைகளின் எதிர்கால கல்வி வளர்ச்சிக்கு உதவும் என்றும் ஈழத் தமிழர் தகவல் நிலையத்தின் தலைவர் சிவா. என். சிவலிங்கம் அறிவித்துள்ளார்.

தற்போதைய மேற்படி பெற்றோர் மாநாடு ஆலோசனைக் குழுவில் திரு. பொன்னையா கனகசபாபதி, திருமதி.ஜீவா துரைரத்தினம் ஆகிய இரு தமிழர்கள் மட்டுமே இருப்பது குறிப்பிடத்தக்கது.

## விஜில் நிறுவனமாகிறது

அகதிநிலைக் கோரிக்கை மனு நிராகரிக்கப்பட்டு, நாடு கடத்தல் உத்தரவுக்கு உள்ளாக்கப்படுபவர்களின் விடயங்களை ரொறன்ரோவில் VIGIL-விஜில் என்னும் அமைப்பு கடந்த ஒன்றரை வருடங்களுக்கு மேலாக கவனித்து வருகின்றது சட்டத்துறையுடனும், சமுக சேவை நிறுவனங்களுடனும் நிரம்பிய ஈடுபாடு கொண்ட சுமார் இருபது பேரின் கூட்டமைப்பாக விஜில் இயங்கி வருகின்றது. அரசாங்கத்தினதோ, அன்றி வேறெந்த நிறுவனங்களினது நிதியுதவியோ பெறாது விஜில் செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. இதுவரை சுமார் 30 பேர் மீதான நாடுகடத்தும் உத்தரவுகளை விஜில் தடுத்து நிறுத்தியுள்ளது. மேலும் பலர் மீதான உத்தரவுகளை நிறுத்த மனுக்களைத் தயாரித்து அமைச்சருக்கு அனுப்பியுள்ளது. இவர்களில் அநேகமானவை இலங்கைத் தமிழர் சம்பந்தப்பட்டவை. மேற்படி விஜில் அமைப்பை, லாபநோக்கற்ற சமுகசேவை நிறுவனமாக அரசாங்கத்தில் பதிவு செய்ய இப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமான கூட்டம் அண்மையில் ரொறன்ரோ "நண்பர்கள் இல்ல"த்தில் நடைபெற்றது. அரசியல் யாப்பு, சட்டவிதி அமைப்பு, நிதி சேகரிப்பு போன்ற பணிகளைக் கவனிக்கவென உப குழுவொன்று இங்கு அமைக்கப்பட்டது. பல்வேறு சமுக சேவை நிறுவனங்களின் பிரதி நிதிகள் பங்குபற்றிய இக்கூட்டத்தில் தமிழர்கள் சார்பில் ஈழத் தமிழர் தகவல் நிலையத்தின் பிரதிநிதி மட்டுமே பங்கு பற்றியது குறிப்பிடத்தக்கது.

## வளர்ந்தோர் பகல் நேர பயிற்சி வகுப்பு

தொழிலின்றி, அல்லது சரியான தொழிற் பயிற்சியின்றி இருப்பவர்களுக்கு உரிய தொழிற் பயிற்சித் திட்டங்களை ஸ்காபரோ மாற்றுக் கல்வி நிலையம் (Scarborough Centre for Alternative Studies) அறிவித்துள்ளது. இவை அனைத்தும் வளர்ந்தோருக்கான பகல் நேர பயிற்சி வகுப்புகள்.

வர்த்தகம், தொழில் நுட்பம், பாடபோதனை, மொழி அறிவு, வாழ்வியல், தொழிற் பயிற்சி, இணைந்த கல்வி என்று பல்வேறு துறைகளில் இங்கு பயிற்சி பெற முடியும்.

15 மாதத்துக்கும் 5 வயதுக்குமிடைப்பட்ட பிள்ளைகளைப் பராமரிக்க வசதியுண்டு. மேற்படி நிலையம் 950 Midland Ave., Scarborough என்ற முகவரியில் அமைந்துள்ளது. மேலதிக விபரங்களை 265-3203 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெறலாம்.


**CANADIAN IMMIGRATION கனடிய குடிவரவு**

தமிழ்பேசும் **கனடிய பாரிஸ்டர்களான ஜெகன் மோகன், திருமதி. தெய்வா மோகன்** ஆகியோரின் சட்ட சேவைகள் குடிவரவு சம்பந்தப்பட்ட விடயங்களைக் கவனிக்க கிடைக்கிறது.

புதிதாக வரும் அகதிகள், Backlog எனப்படும் தேக்க நிலையிலிருப்பவர்கள் ஆகிய இரு சாராரதும் கோரிக்கைகளை நாங்கள் கவனிக்கிறோம். Sponsor எனப்படும் பொறுப்பேற்றுப் பராமரிக்கும் விண்ணப்பங்கள், மற்றும் குடிவரவு மேன்முறையீட்டுச் சபை (Immigration Appeal Board) க்கு விண்ணப்பிக்கும் மேன்முறையீடுகளைத் தயாரித்து ஆஜராகின்றோம்.

குடிவரவு அகதிகள் சபையால் அகதி நிலை கோரிக்கை நிராகரிக்கப்பட்டவர்கள் மத்திய நீதிமன்ற (Federal Court of Appeal) அப்பீலுக்கு அனுப்பும் விண்ணப்பங்களையும் நாங்கள் கையாளுகின்றோம். அத்துடன் அகதி நிலை நிராகரிக்கப்பட்டு வெளியேற்றக் கட்டளைக்குள்ளாக்கப் பட்டவர்களின் வெளியேற்றக் கட்டளையைத் தடுத்து நிறுத்தும் பொருட்டு ஒட்டாவா குடிவரவு தலைமை அலுவலகத்துக்கும் குடிவரவு அமைச்சருக்கும் மனிதாபிமான சமர்ப்பணங்களைத் தயாரித்து வழங்குகின்றோம்.

**சட்டஉதவிப் பத்திரம் எங்களால் ஏற்கப்படும்**
**WE ACCEPT LEGAL AID CERTIFICATE**

**MOHAN & MOHAN**

Scherwood Centre, 3300 McNicoll Ave., Suite 225, Scarborough, Ontario, M1V 5J6

**(416) 609-8200**

ஜெகன் என். மோகன் LL.B.
பாரிஸ்டரும் சொலிஸிட்டரும்

தெய்வா மோகன்
பாரிஸ்டரும் சொலிஸிட்டரும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறப்பு, மரண, கல்விச் சான்றிதழ்கள் இலவசமாக மொழிபெயர்க்கும் சேவை
## TRANSLATION OF DOCUMENTS & CERTIFICATES

கனடாவுக்குப் புதிதாக வந்து குடியேறுபவர்கள், தங்களுடன் தங்களின் கல்வித் தகைமைச் சான்றிதழ்கள், பிறப்பு, இறப்பு, மரண அத்தாட்சிப் பத்திரங்கள் உட்பட பல்வேறு தொழில் சான்றுப் பத்திரங்களையும் கொண்டு வருகின்றனர். இவ்வாறு கொண்டுவரப்படும் சகல பத்திரங்களும் ஆங்கிலம் அல்லது பிரெஞ்சு மொழிகளில் இல்லாதிருந்தால் அவைகளை மேற்படி இரண்டு மொழிகளில் ஏதாவது ஒன்றுக்கு உத்தியோகபூர்வமாக மொழி பெயர்ப்புச் செய்யவேண்டியது அவசியம்.

இவை தொடர்பாக அரசாங்க தகவற் பிரிவு தெரிவித்துள்ள விபரங்கள் கீழே தொகுத்துத் தரப்படுகின்றது:

பிறப்பு, திருமண அத்தாட்சிப் பத்திரங்கள், தொழில் பதிவேடுகள், பாடசாலைச் சான்றிதழ்கள், பட்டப்படிப்பு, டிப்புளோமா சான்றிதழ்கள் உட்பட சகல ஆவணங்களையும் இலவசமாக ஆங்கிலத்தில் அல்லது பிரெஞ்சு மொழியில் மொழி பெயர்த்து வழங்க பிரஜாவுரிமைக்குப் பொறுப்பான அமைச்சு (Ministry of Citizenship) தனியான மொழி பெயர்ப்புப் பீடமொன்றை அமைத்திருக்கின்றது.

ரொறன்ரோவில், சென் பற்றிக் வீதியில் 132ம் இலக்கக் கட்டடத்தில் மேற்படி மொழியெர்ப்புப் பீடம் அமைந்துள்ளது. இதன் தபால் விலாசம்: Translation Bureau, 132, St. Patrick Street, Toronto, M5T 1V1 தொலைபேசி இலக்கம்: 965-1458

கல்வித் தகைமைச் சான்றிதழ்களை மொழி பெயர்க்க வேண்டுமானால் மூலப்பிரதிகளை அனுப்பாமல், போட்டோ பிரதிகளை மட்டும் மேற்படி முகவரிக்கு அனுப்ப வேண்டும். அதனுடன் சேர்த்து உங்களுடைய கனடிய குடிவரவுத் தகுதியை நிரூபிக்கும் அத்தாட்சிப் பத்திரத்தின் போட்டோ பிரதியையும் இணைத்து அனுப்பவேண்டும். அவசரம் தேவையெனில் மேற்படி அலுவலகத்துக்கு நேரடியாகவும் சென்று கையளிக்கலாம். தபாலில் அனுப்பினாலும் சரி, நேரில் சென்று கையளித்தாலும் சரி உங்களின் வேண்டுதல் கடிதமொன்றும் அதனுடன் இணைக்கப்பட்டிருக்கவேண்டும். உங்களுக்காக வேறொருவர் மூலம் மேற்குறிப்பிட்ட பத்திரங்களை நீங்கள் அனுப்பினால், அவைகளை மொழி பெயர்ப்புப் பீட ஊழியர்கள் ஏற்கமாட்டார்கள்.

மொழி பெயர்ப்புப் பீடம் வேலைநாட்களில் காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 4:30 மணிவரை திறந்திருக்கும்.

பெரும்தொகையான பத்திரங்கள் தினசரி மொழிபெயர்ப்புச் செய்வதற்குக் கிடைத்து வருவதால் ஆகக்குறைந்தது இரண்டு மாதங்களுக்காவது தாமதம் ஏற்படலாம்.

வெளிநாடுகளில் வழங்கப்பெற்ற கனிஷ்ட பிரிவு, மேற்பிரிவு கல்வித் தகைமைச் சான்றிதழ்களை மொழிபெயர்ப்புச் செய்தபின்னர் அவைகளை மதிப்பீடு செய்வதற்கும் இலவசமாக அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ளது. ஒன்ராறியோ மாநில கல்வி அமைச்சு இந்த ஏற்பாட்டினைச் செய்துள்ளது. உயர் கல்வி கற்பதற்குத் தேவைப்படும் மேற்படி ஆவணங்களை மதிப்பீடு செய்ய விரும்புவர்கள் கீழ்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளலாம். Evaluation Services, The Ministry of Education, 18th Floor, Mowat Block, Queen's Park, Toronto, Ontario, M7A 1L2 தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்: 965-1356

வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களில் கல்வி கற்றுப் பெறப்பட்ட சான்றிதழ்களை ரொறன்ரோ பல்கலைக் கழகத்தில் மதிப்பீடு செய்ய முடியும். வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்கள் பல்கலைக் கழகக் கல்லூரிகளில் பெறப்பட்ட சான்றிதழ்களை கனடிய பல்கலைக் கழகங்கள்/கல்லூரிகளின் சான்றிதழ்களுக்கு இணைந்த மட்டத்துக்கு மதிப்பீடு செய்வதாக இது அமைகிறது.

இது விடயமாக தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: Comparative Education Service, University of Toronto, 315 Bloor St. West, Toronto, Ontario M5S 1A3 தொலைபேசி இலக்கம் 978-2185

### ● ஒரு கடிதம்

கனடா தமிழீழச் சங்க
இயக்குனரிடமிருந்து........

ஆசிரியர்
தமிழர் தகவல்

"தங்களது பெப்ரவரி மாத தமிழர் தகவல் இதழ் கிடைக்கப்பெற்றேன்.

சுருக்கமாகவும், விளக்கமாகவும், தரமாகவும் இதழ் அமைந்திருக்கிறது. தங்களது முயற்சி தடங்கலின்றித் தொடர எனது வாழ்த்துகள்."

நன்றியுடன்
ம.தயாளன்

## சிறுதொழில் முயற்சி தமிழில் கருத்தரங்கு

"சிறுதொழில் முயற்சி-ஆரம்பித்து நிர்வகித்தல்" என்னும் பொருள் பற்றிய கருத்தரங்கொன்று இம்மாதம் (மார்ச்) 16ம் திகதி டொன்மில்ஸ் வீதி, 2975 இலக்கத்திலுள்ள ஓரியோல் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை சிறுபான்மையினர் நலன்பேண் மன்றம் (SACEM) இதனை ஏற்பாடு செய்துள்ளது. பின்வரும் விடயங்கள் கருத்தரங்கில் ஆராயப்படும்: ஒரு தொழில் முயற்சியை ஆரம்பிக்க ஊக்குவிக்கும் காரணிகள்: ஒரு தொழில் முயற்சியை ஆரம்பிக்க அரசாங்கத்திடமிருந்து அல்லது தொழில் சம்பந்தப்பட்ட ஸ்தாபனங்களிடமிருந்து பெறக்கூடிய பொருளாதார, தொழில் நுட்ப உதவிகள்: தொழில் முயற்சிகள் ஆரம்பிக்க ஏற்ற சூழல்: சிறு தொழில் முயற்சியில் பொருளாதார வரித் திட்டமிடுதலின் முக்கியத்துவம்: பொருட்களும் சேவைகளுக்குமான வரி. கருத்தரங்கு தமிழில் நடைபெறும்

மேலதிக விபரங்களை அகஸ்ரின் ஜெயநாதன் (292-2862) யோகி ரீ. ராஜா (291-4400), மரியா எட்வேட் (431-2455) ஆகியோருடன் தொடர்பு கொண்டு பெறலாம்

## கடித உறைகளை கவனமாக வைத்திருங்கள்

1986ம் ஆண்டு மே மாதத்துக்கும் 1989ம் ஆண்டு ஜனவரி மாதத்துக்குமிடையில் கனடாவுக்கு வந்து அகதிநிலை கோரி தேக்க நிலையிலுள்ள (Backlog) வர்களுக்கு தற்போது சுயவிபரப் பத்திரங்களும், தகவல் நிரப்பும் பத்திரங்களும் அனுப்பப்படுகின்றன அல்லவா? இவ்வாறு தபாலில் அனுப்பப்படும் பத்திரங்கள் தங்களுக்குத் தாமதமாகக் கிடைப்பதாக பலரும் புகார் செய்துள்ளனர். பத்திரங்களில் குறிப்பிடப்படும் திகதிக்குப் பல நாட்கள் பிந்தி கடிதங்கள் வருவதாகவும் சிலர் தெரிவித்துள்ளனர். இவ்வாறன சந்தர்பபங்களில் தங்களின் பத்திரங்கள் தபாலில் வந்த கடித மேலுறைகளை (Envelape) கவனமாக தங்களுடன் வைத்திருக்குமாறு பொதுமக்களுக்கு சட்ட உதவி ஆலோசனை நிலையங்கள் அறிவுரை வழங்கியுள்ளன.

## அகதிகள் உரிமைநாள் ஏப்ரல் 4ம் திகதி

அகதிகள் உரிமை நாள் (Refugee Rights Day) நிகழ்ச்சிகளை வழக்கம் போல ஏப்ரல் மாதம் நான்காம் திகதி கொண்டாடுவதற்கு பல ஏற்பாடுகளை இதனுடன் சம்பந்தப்பட்ட அமைப்புகள் பலவும் மேற்கொண்டு வருகின்றன. ரொறன்ரோ அகதிகள் விவகார அமைப்பு, முழுநாள் நிகழ்ச்சியாக கருத்தரங்கு, சொற்பொழிவு, ஓரங்க நாடகம் ஆகியவைகளை நடத்த ஏற்பாடு செய்துள்ளது. இது சம்பந்தமான சகல விபரங்களும் தமிழர் தகவல் ஏப்ரல் இதழில் வெளிவரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாரா ட்ரவல்ஸ்

"The Reliable Travel Agent" (SM)

• குறைந்த விலையில்
இலங்கை, இந்திய மற்றும் ஆசிய, ஐரோப்பிய நாடுகளுக்கு
குறைந்த விலையில் பயணச்சீட்டுக்கள்

• அழையுங்கள் **292-9465**

APPOINTED CONSOLIDATORS

KLM

BRITISH AIRWAYS

AIR LANKA

AUTHORIZED SALES AGENT

Thai

SINGAPORE AIRLINES

வியாபார நேரம்:
9.00 A.M. - 8.00 P.M. (திங்கள் முதல் வெள்ளி வரை)
10.00 A.M. - 5.00 P.M. (சனிக்கிழமை)

**சுவாரா ட்ரவல்ஸ் கனடா INC.**
3852 FINCH AVENUE EAST (MAIN FLOOR) UNIT G9
SCARBOROUGH, ONTARIO, MIT 3T9



# Why tough times are good times for your RRSP...



**TRIMARK *RRSP***
**MUTUAL FUNDS**
*Quality Investments. Trusted Leadership.*

நீங்கள் கடந்த 1982ம் ஆண்டு பொருளாதாரச் சுருக்க நேரத்தில் திறைமார்க் (Frimark Funds) ஸ்தாபனத்தில் $5,500 ஐ முதலிட்டு இருந்தால் இன்று அதன் பெறுமதி $19, 636. சராசரி வருடம் ஒன்றுக்கு 16% விகித வளர்ச்சி.

இன்று முதலீடு செய்வதற்கு நல்ல காலமா? ஆம் கஷ்ட காலங்களில் விலைகள் மலிவு ஆதாயம் அதிகம். உங்கள் RRSP யின் சிறந்த வளர்ச்சிக்கு உகந்த காலம்.


நீங்கள் ஒரு RRSP முதலீடு செய்ய முன் ஆலோசனை பெற்று நன்மை அடைய
அழையுங்கள்
நிதி நிபுணர்
**யோகி தம்பிராஜா** F.C.A. F.C.M.A. (U.K)

2075 KENNEDY ROAD #608
SCARBOROUGH, ONT. M1T 3V8
**Tel: (416) 291-4400**
**(416) 269-8071** (24hrs)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருமானவரியைக் குறைப்பது பற்றி தமிழில் கருத்தரங்கு



உங்கள் வருமானவரியைக் குறைப்பது எப்படி என்னும் பொருள் பற்றிய சிறப்புக் கருத்தரங்கொன்று கடந்த மாதம் 6ம் திகதி, ரொறன்ரோ தமிழர் கூட்டுறவு மனை கட்டட மண்டபத்தில் நடைபெற்றது. தமிழர் கூட்டுறவு மனை மன்றமும், வட ஆசிய மாதர் சங்கமும் இணைந்து இந்தக் கருத்தரங்கை நடத்தின. பிரபல நிதி நிபுணர் யோகி தம்பிராஜா இதற்குத் தலைமை தாங்கினார்.

அவர் ஒரு Case Study முறையைக் கையாண்டு விளக்கங்களை வழங்கி விரிவுரை நிகழ்த்தினார். முக்கியமாக ஸ்காபரோவில் வசிக்கும் ஒரு நடுத்தர தமிழ்க்குடும்பம், சட்ட பூர்வமாக தங்கள் வருமான வரியை அரைவாசிக்கு மேல் குறைக்கும் வழி முறைகளை இங்கு எடுத்துக் கூறினார். மூன்று குழந்தைகளைக் கொண்ட குடும்பத்துக்கு பத்தாயிரம் டாலர்கள் கழிவு கொடுக்கலாமென்றும், R.R.S.P. செய்வதால் மேலும் ஐயாயிரம் டாலர்களை கழிக்கலாமென்றும், இவை அநேகமான நடுத்தரக் குடும்பங்களுக்குப் பொருந்துமென்றும், இதனால் கட்டவேண்டிய வருமானவரி 4500 டாலர்களால் குறையுமென்றும் யோகி தம்பிராஜா இங்கு விளக்கினார்.

# தேக்கநிலை அகதிகளின் முதற்கட்ட விசாரணை துரிதமாக்கப்படுகிறது

தேக்கநிலை அகதிகள் (Backlog Refugees) விசாரணை நடைமுறைகள் பற்றி கடந்த இதழில் சில தகவல்களை வெளியிட்டிருந்தோம். இந்த இதழில் மேலும் சில விபரங்களைத் தருகின்றோம்.

டேவிஸ்வில், மிஸிஸாக ஆகிய இரண்டு இடங்களிலும் இதற்கென விசேஷமாக அமைக்கப்பட்ட அலுவலகங்கள் இது சம்பந்தமான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தியுள்ளன. Paper Screening Process எனப்படும் பத்திரங்களை பரிசீலித்துத் தீர்மானிக்கும் திட்டத்தின் கீழ் இதுவரை சுயதகவல் பத்திரங்களைப் பெறாத தேக்கநிலை அகதிகள் அனைவரும் மார்ச் மாத இறுதிக்குள் தங்கள் பத்திரங்களைத் தபாலில் பெறுவார்கள் என்று மேற்படி நிலையங்களில் தலைமை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

சுயதகவல் பத்திரத்துடன், குடிவரவு தகவல் பத்திரம் (Immigration Information Form) என்ற இரண்டு பக்கப் பத்திரமொன்றும் சேர்த்து அனுப்பப்படுகின்றது. இதில் கேட்கப்பட்டுள்ள விபரங்களை விளக்கமாகவும், ஒழுங்காகவும் நிரப்பி அனுப்ப வேண்டியது அவசியமாகும்.

தேக்க நிலையிலுள்ள அகதிகள் பற்றிய சரியான கணக்கெடுப்பு இதுவரை எங்கும் மேற்கொள்ளப்படவில்லை. தேக்க நிலையில் எண்பதாயிரம் பேர் வரை மட்டுமே இருப்பதாக சில தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால் ஒரு லட்சத்துப் பத்தாயிரம் பேர் இருப்பதாக வேறு சில புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. அநேகமாக ஆகஸ்ட் மாத பிற்பகுதிக்குள் இது பற்றிய சரியான விபரம் தெரியவரலாமென்று கனடிய வேலை வாய்ப்பு குடிவரவு அமைச்சு எதிர்பார்க்கப்படுகின்றது.

Paper Screening திட்டத்தின் கீழ் துரித நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்ற பெயரில் சில தவறுகளும் இடம்பெறுவதை இங்கு சுட்டிக் காட்ட வேண்டும். உதாரணமாக 1986ம் ஆண்டு மே மாதத்துக்கு முன்னர் கனடாவுக்கு வந்து, ADR (Administrative Review) திட்டத்தின் கீழ் நிரந்தர வதிப்பிட உரிமை (Landed Immigrant) பெற்ற சிலருக்கும் தேக்நிலை அகதிகளுக்கான பத்திரங்கள் அனுப்பப்பட்டுள்ளன. இவர்களில் சிலர் கனடிய பிராஜாவுரிமை நேர்முகப் பரீட்சை முடித்தவர்கள் என்பதும், வேறு சிலர் பிராஜாவுரிமை நேர்முகப் பரீட்சையை முடித்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறு பத்திரங்களை பெற்ற நிரந்தர வசிப்பிட உரிமை பெற்றவர்களில் பலர் தமிழர்களாவர். இவர்கள் இது விடயத்தை ஸ்காபரோ கத்தோலிக்க குடிவரவு நிலையத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளனர்.

"சில வேளைகளில் இது கம்பியூட்டர் தவறுதலால் இடம் பெற்றிருக்கலாம். அவ்வாறு தவறுதலாகப் பத்திரங்ள் கிடைக்கப் பெற்றவர்கள் அதனை நிரப்பி அனுப்ப வேண்டிய தேவையில்லை." என்று குடிவரவு இலாகா தலைமை அதிகாரி ஒருவர் கத்தோலிக்க குடிவரவு நிலையத்துக்கு அறிவித்துள்ளார்.

தேக்கநிலை அகதிகள் தொடர்பான விபரங்களை அகதிநிலை கோரிக்கையாளர்கள் பெறுவதற்கான தனியான விசேஷ தொலைபேசித் தொடர்பு ஊழியர்கள் மிஸிஸாக, டேவிஸ்வில் அலுவலங்களில் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுடன் பின்வரும் தொலைபேசி இலங்களில் தொடர்பு கொள்ளலாம்.
மிஸிஸாக 277-6282 டேவிஸ்வில் 973-1244



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடகிழக்கில் நடைபெறும் ராணுவத் தாக்குதல்களை நிறுத்த உதவுமாறு கனடிய அரசிடம் வேண்டுகோள்

**அமைச்சர் ஜோ கிளாக்கிற்கு கனடா தமிழர் தேசிய மன்றத் தலைவர் கடிதம்**

*இலங்கையின் வட கிழக்கு மாகாணமான தமிழீழப் பகுதியில் ஸ்ரீலங்கா அரசாங்க படைகள் தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் ராணுவத் தாக்குதல்களை உடனடியாக நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு கனடிய அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.*

கனடா தமிழர் தேசிய மன்றத்தின் சார்பில் அதன் தலைவர் திரு.நா.சிவலிங்கம், கனடிய வெளிவிவகார அமைச்சர் கௌரவ ஜோ. கிளாக்கிற்கு, பெப்ரவரி மாதம் 18ம் திகதி அனுப்பிவைத்த கடிதத்தின் சாராம்சம் கீழே தரப்படுகின்றது. ஆங்கிலத்தில் அனுப்பப்பட்ட அக்கடிதத்தையும் இந்தப் பக்கத்தில் காணலாம்.

"ஸ்ரீலங்கா ஆயுதப் படையினர், இலங்கையின் வட-கிழக்குப் பகுதியில் மேற்கொண்டு வரும் தொடர்ச்சியான ராணுவத் தாக்குதலையிட்டு கனடாவில் வாழும் தமிழர் சமுதாயம் மிகவும் கலக்கமடைந்துள்ளது. இந்தத் தாக்குதல்களால் பலநூற்றுக் கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். நான்கு லட்சத்துக்கும் அதிகமான மக்கள் தங்கள் வீடு வாசல்களை இழந்து அகதிகளாகியுள்ளனர். தனியார் பொதுச் சொத்துக்கள் மோசமாக அழிக்கப்பட்டுள்ளன. இதனால் தமிழ்ப் பகுதிகளில் பெரும் பொருளாதார நசிவு ஏற்பட்டுள்ளது.

சர்வதேச நாடுகளின் கோரிக்கைகளையும் மீறி ஸ்ரீலங்கா அரசு சட்டத்துக்கு முரணான கைது செய்தல்கள், தடுப்பு வைப்புக்கள், உயிர் அழிப்புகள் போன்ற மனிதாபிமானமற்ற செயல்களைத் தொடர்ந்து வருகின்றது. பொதுமக்கள் வதியும் பிரதேசங்களில் வேண்டுமென்றே குண்டு வீசி மக்களைப் பலிகொள்கின்றது. இதனாலேயே அதிக மரணங்கள் நிகழ்ந்துள்ளன.

மேலும் அரசு வடக்கு கிழக்கிற்கு அத்தியாவசியமான உணவு, மருந்து வசதிகளை அனுப்பாது தடுப்பதால் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மீட்பு நடவடிக்கைகளைப் பெரிதும் பாதிப்படையச் செய்கிறது.

1990 அக்டோபர் 25ல் நீங்கள் கூறிய கூற்றினை இங்கு நினைவுபடுத்துகிறோம். "இன்று ஸ்ரீலங்காவின் வடக்கில் நடைபெறும் பாரதூரமான மனித உரிமை மீறல் செயல்களை காண்கிறோம். அப்பாவிப் பொதுமக்கள் இதற்குப் பலியாகாதிருக்க சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படவேண்டும்".

**National Association of Canadian Tamils**

NACT, c/o P. O. Box 231, Station 'A', Mississauga, Ontario, Canada L5A 2Z7

February 18,1991

Hon.Joe Clark
Minister of External Affairs
Ottawa.

Dear Sir,

CONTINUING MILITARY OFFENSIVE BY SRI LANKAN ARMED FORCES IN NORTH AND EAST OF SRILANKA.

We the Canadian Tamil Community are deeply perturbed by the continuing military operations of the SriLankan armed forces in the north and east of SriLanka which has caused the deaths of hundreds of civilians, rendered over 400,000 persons homeless and caused massive destruction to public and private property seriously clipping economic life in the area.

Arbitrary arrests, detentions and extra judicial killings of innocent civilians continue, despite international condemnation of such actions. Indiscriminate carpet bombings of civilian installations has been the primary cause of heavy casualties. The north and east continue to be deprived of essential food and medical supplies and the relief efforts of the ICRC are being seriously hampered by the armed forces.

We wish to quote here your concern on the situation in Sri Lanka expressed in your statement of 25th October 1990 that, " we are witnessing a very serious situation in humanitarian terms in northern Sri Lanka and every effort must be made to ensure that innocent civilians do not become victims of the current conflict".

As the situation continues to detoriate further and as innocent civilians are being subjected to much more misery, death and desolation than ever before, we urge you to use your good offices to request the Sri Lankan government to halt its military operations in the north and east of Sri Lanka and seek a negotiated settlement to the conflict in the country.

Siva N.Sivalingam
President

தொடர்ந்தும் நிலைமை சீரழிந்தே வருகின்றது. பொதுமக்கள் பெரிதும் பாதிப்படைகிறார்கள். இந்த நிலைமையில் ஸ்ரீலங்கா அரசினை இராணுவ தீர்வைக் கைவிட்டு பேச்சுவார்த்தை மூலமான தீர்வுக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்குமாறு தங்களை வேண்டுகின்றோம்." என்று இந்தக் கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது.

இது தமிழர் தகவல் இரண்டாவது இதழ். இங்கு வாழும் தமிழர்களுக்குத் தேவையான, அவர்களுடன் சம்பந்தப்பட்ட விடயங்கள் இதில் இடம்பெற்றுள்ளன. இவற்றுள் அநேகமானவை தமிழ் மக்கள் கட்டாயம் தெரிந்திருக்க வேண்டியவை. இதனைப் படித்து முடித்த பின்னர் உங்கள் நண்பர், உறவினர் எவருக்காவது நீங்கள் விரும்பினால் கொடுக்கலாம். அல்லது அவர்களுக்கு தனிப்பிரதி தேவையெனில், அவர்களின் பூரணமான தபால் முகவரியை எமக்கு எழுதி அனுப்பலாம். எம்முடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி இந்த இதழின் இரண்டாம் பக்கத்தில் இடம்பெற்றுள்ளது. நாம் அவர்களுக்கு நேரடியாகத் தபாலில் அனுப்பி வைப்போம். நீங்கள் உங்கள் வசிப்பிடத்தை மாற்றினால் தவறாது எமக்கு அறிவியுங்கள். உங்கள் பிரதி உங்களுக்குத் தாமதமின்றியும், தவறாமலும் கிடைக்க இது உதவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தமிழர்கள் மனதில் வைத்திருக்க வேண்டிய பெயர்*
*தமிழர்கள் நினைவில் நிலைத்திருக்க வேண்டிய பெயர்*

# சிவாஸ் ரேடிங் கோ லிமிட்ட்

உங்கள் தேவை என்ன?
மரக்கறிகளா? கடல் உணவுகளா? மீன் வகைகளா?
இலங்கை, இந்திய உணவுப் பண்டங்களா?
தோசை, இடியப்பம், அப்பம் சுடச்சுட சாப்பிட விருப்பமா?
உங்கள் தேவை எதுவானுல் என்ன? உடன் எங்களை நாடுங்கள்!
**நீங்கள் கேளுங்கள்! நாங்கள் தருகின்றோம்!**

திருமணங்களுக்குத் தேவையான கூறை, பட்டுவேட்டி, சால்வை, தலைப்பாகை, குத்துவிளக்கு, பூமாலைகள், மணவறை, மண்டபவசதி, விசேஷ உணவு வகைகள் உட்பட அனைத்துத் தேவைகளையும் ஒரே இடத்தில் பெற நீங்கள் உனடடியாகத் தொடர்பு கொள்ள வேண்டிய இடம்.

## SIVA'S TRADING CO. LTD

3852 Finch Ave. East, (Kennedy/Finch) Scarborough,
Tel: **321-2739**

நடைபயிலும் போது அவள் அன்னம்
துள்ளித்திரியும் போது அவள் புள்ளிமான்
குரலோசையில் அவள் மாங்குயில்
மருண்டிடும் அவள் கருவிழிகள் கயல் மீன்கள்

கண்டவர் மனங்கவரும் மங்கை அவளின்
மேனியெங்கும் பளிச்சிட்டுத் துலங்குவது

## பாலாஸ் 22 கரட் தங்க நகைகள்

நங்கையர் விரும்பும் நவநாகரிக நகைகளின்
நம்பிக்கையான நகை வியாபாரிகள்

# பாலாஸ்

584 A பார்லிமென்ட் வீதி (வெலஸ்லி சந்தி) ரொறன்ரோ

Phone: (416) 924-7890 Fax: 924-2713



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்காயிரம் வரையிலான தமிழர்கள் மூன்று மாதத்தில் வேலையிழந்துள்ளனர்

கனடாவில் வேலையிழப்போர் தொகை வெகுவேகமாக அதிகரித்து வருகின்றது. கனடிய அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கையே இதற்குக் காரணம் என்று எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

பல்வேறு தொழிற்சாலைகளும், வேலைத்தலங்களும், உற்பத்தி நிறுவனங்களும் விற்பனை வீழ்ச்சியைக் காரணம் காட்டி, மூடுவிழா நடத்திவருகின்றன. அதனால் இங்கு கடமையாற்றும் ஊழியர்களுக்கு வேலை நீக்க நோட்டீஸ் வழங்கப்பட்டிருக்கிறது.

இந்த வருடத்தின் முதல் மாதத்தில் (ஜனவரி) மட்டும் தொண்ணூறாயிரம் பேர் வேலையிழந்துள்ளதாகப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. இவர்களில் 58,000 பேர் ரொறன்ரோ உட்பட்ட ஒன்ராறியோ மாநிலத்தைச் சேர்ந்தவர்களாவர்.

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் இவ்வளவு தொகையானவர்கள் வேலை யிழந்தது இதுவே முதற்தடவை என்று ஒன்ராறியோ மாநில முதல்வர் பொப் றே சுட்டிக் காட்டியுள்ளார். வேலையிழப்புகள் அதிகரித்து வருவதால் பொது உதவிப் பணம் (Welfare) வேலையற்றோர் காப்புறுதிப் பணம் (Unemployment) ஆகியவற்றிற்கு விண்ணப்பம் செய்வோர் தொகையும் பெருமளவு அதிகரித்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்று மாதங்களுக்குள் ஆகக் குறைந்தது 4000 தமிழர்கள் மேற் சொன்ன காரணங்களால் தங்கள் வேலைகளை இழந்திருக்கலாம் என்று மதிப்பிட்டுள்ளது. இவர்களுள் 90 வீதமானவர்களும் ரொறன்ரோ பகுதியில் வசிப்பவர்களாவர்.

# பொலிஸ் விண்ணப்பகாரருக்கு இலவச வகுப்பு

கனடிய பிரஜாவுரிமை பெற்றவர்கள் மட்டுமன்றி, கனடாவில் நிரந்தரமாகக் குடியிருக்க உரிமை பெற்றவர்களும் பொலிஸ் கடேற், கான்ஸ்டபிள் ஆகிய பதவிகளுக்கு இப்போது விண்ணப்பிக்க லாம். இதுபற்றி பெப்ரவரி மாத தமிழர் தகவல் இதழில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. இதனைப் படித்த பலர் மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பங் களை அனுப்பியுள்ளனர். இவ்வாறு விண்ணப்பிப்ப வர்கள் அதற்கான முதலாவது பரீட்சைக்குச் செல்வதற்கு முன்னர், அதற்காகத் தம்மைத் தயார்படுத்துவதற்கான கருத்தரங்கு வகுப்புகளை பொலிஸ் வேலை வாய்ப்புப்பிரிவு இப்போது நடத்து கிறது. ஒவ்வொரு மாதமும் இரண்டு செவ்வாய்க் கிழமைகளில் இவ்வகுப்பு நடைபெறும். இந்த மாத (மார்ச்) வகுப்புகள் 4ம், 18ம் திகதிகளில் ரொறன்ரோ 40 College St. அலுவலகத்தில் பிற்பகல் ஆறுமணிக்கு நடைபெறும் என்று பொலிஸ் வேலை வாய்ப்புப் பிரிவு அதிகாரி சார் ஜன்ட் சாம் பொர்னன்டோ தெரிவித்தார். ஆர்வ முள்ள அனைவரும் இதில் பங்குபற்றலாம். மேல திக தகவல்களை பெற 324-6015 என்ற தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

அண்ணலும் நோக்க
அவளும் நோக்கினுள்.... எதனை?

ஸ்ரீ சிவா தங்க நகைகளை

கண்ணொடு பொன்நகை நோக்க
புன்னகை மின்னலாய் கீறிற்று.. ஏன்?

ஸ்ரீ சிவா தங்க நகைகளினுல்

உங்கள் குடும்பத்தின் குதூகல வைபவங்களைச் சிறப்பிக்க
அழகுக்கு அழகூட்டும் ஆபரணங்களை
கண்ணைக் கவரும் வண்ண வடிவங்களில் தருபவர்கள்

ஸ்ரீ சிவா ஜுவலறி

721 Bloor St. W, Suite 2C, Toronto, Ontario
(416) 531-4867



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிப்ளக்ஸ் பிரிண்டிங், கனடா 975-0196